Ontario Shores
Centre for Mental Health Sciences

# நோயாளர்களுக்கும் மாற்றீட்டுத் தீர்மானம் எடுப்பவர்களுக்குமான IAR தகவல்கள்

**அந்தரங்கம் மற்றும் மின்னணுரீதியான (Electronic) உடல் ஆரோக்கியப் பதிவுகளில் உங்களுடைய மதிப்பீட்டைப் பகிர்தல்**

உங்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் உடல் ஆரோக்கியச் சேவைகளை உங்களுக்கு வழங்குவதற்கும், மாகாணம் முழுவதுமுள்ள நிறுவனங்களில் நீங்கள் சேவைகளைப் பெற உதவிசெய்வதற்கும் மன நல அறிவியலுக்கான Ontario Shores மையம் (Ontario Shores) உறுதிபூண்டுள்ளது. உங்களுடைய ஆரோக்கியப் பராமரிப்பு அனுபவத்தையும் பராமரிப்பையும் மேலும் முன்னேற்றுவதற்காக மாகாணரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பீட்டுப் பதிவு(IAR) முன்னெடுப்பு ஒன்றில் Ontario Shores பங்கு கொள்கின்றது.

**IAR முன்னெடுப்பு என்றால் என்ன?**

பல்வேறு உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களும் வெவ்வேறு மதிப்பீடுகளைப் பார்ப்பதற்காகப் பயன்படுத்தும் மின்னணுவியல்(electronic) வலையை அடிப்படையாகக் கொண்டதொரு காட்டியாக IAR உள்ளது. உங்களுடைய பராமரிப்பு மற்றும் சிகிச்சையுடன் தொடர்புடைய, அங்கீகரிக்கப்பட்ட உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்கள் அனைவரும் உங்களுடைய மதிப்பீட்டுத் தகவல்களை விரைவாகவும் பாதுகாப்பானதொரு முறையிலும் பகிர்ந்துகொள்வதே IAR முன்னெடுப்புக்கான ஒரு தொலைநோக்காக இருக்கின்றது.

உங்களுடைய ஆரோக்கியத் தகவல்களை, ஏனைய உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களுடன் பகிர்ந்துகொள்வதற்காக பாதுகாப்பானதொரு மின்னணுவியல் அமைப்பை IAR பயன்படுத்துகின்றது. அவர்கள் பின்வருவனவற்றைச் செய்வதற்கு இது அனுமதி வழங்குகின்றது:

- உங்களுடைய தேவைகளின் அடிப்படையில் உடல் ஆரோக்கிய ஆதரவையும் சேவைகளையும் வழங்கல்.
- உங்களுடைய உடல் ஆரோக்கியச் சரித்திரம் மற்றும் தேவைகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட பூரணமான அறிக்கை உங்களுடைய வழங்குநர்களிடம் இருப்பதை உறுதிப்படுத்தல்.

உங்களுடைய தனிப்பட்ட உடல் ஆரோக்கியத் தகவல்களின் அந்தரங்கமும் பாதுகாப்பும் ஒரு முன்னுரிமையாகும்.

- உங்களுடைய உடல் ஆரோக்கியத் தகவல்கள் ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படுகின்றன.
- உங்களுடைய சேவைகளை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட நபர்களால் மட்டுமே உங்களுடைய உடல் ஆரோக்கியத் தகவல்களைப் பார்க்க முடியும்.
- அனைத்து உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களும் உங்களுடைய தகவல்களை இரகசியமாக வைத்திருப்பதாக ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளார்கள்.
- உங்களுடைய தகவல்களை ஒருவர் பார்க்கும் போது, அது ஒரு பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றது. உங்களுடைய தகவல்களை அங்கீகரிக்கப்படாத எவரும் அணுகவில்லை என்பதை உறுதிசெய்வதற்காக, இந்தப் பதிவேடு ஒழுங்காகப் பரிசீலிக்கப்படுகின்றது.
- சட்டப்படி தகவல்கள் சேமிக்கப்படுகின்றன மற்றும்/அல்லது அழிக்கப்படுகின்றன.
- உங்களுடைய தனிப்பட்ட உடல் ஆரோக்கியத் தகவல்களில் ஏதாவது சந்தேகத்துக்கிடமான மீறல் அல்லது அங்கீகரிக்கப்படாத அணுகல் இருப்பின் நாங்கள் புலன்விசாரணை செய்வோம்.

**என்னுடைய இருப்பிட மதிப்பீடு உபகரண – மன நலம் ((Resident Assessment Instrument-Mental Health (RAI-MH)) மற்றும் தேவைகளுக்கான ஒன்ராறியோப் பொது மதிப்பீடு ((Ontario Common Assessment of Needs) (OCAN)) மதிப்பீடுகளை, ஏனைய உடல் ஆரோக்கியச் சேவைகளை வழங்கும் மருத்துவர்கள் எவ்வாறு அணுகுவார்கள்?**

Ontario Shoresல் பூர்த்திசெய்யப்பட்ட, உங்களுடைய RAI-MH மற்றும்/அல்லது OCANகளின் மின்னணுவியல் பிரதியொன்று William Osler Health Centreல் வைக்கப்பட்டிருக்கும் IAR தகவல்தளத்தில் பாதுகாப்பாகச் சேமிக்கப்படும்; அத்துடன் ஏனைய உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களால் அணுகக்கூடியதாகவிருக்கும். மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்கள் வரைக்கும் உங்களுடைய RAI-MH மற்றும்/அல்லது OCANகள் சேமிக்கப்பட்டிருப்பதுடன் பார்க்கக்கூடியதாகவுமிருக்கும்.

**என்னுடைய மதிப்பீடுகளைப் பகிர்வதன் நன்மைகள் யாவை?**

Ontario Shoresக்கு வெளியேயுள்ள சேவைகளுக்கு நீங்கள் பரிந்துரைக்கப்பட்டதன் காரணங்கள் உள்ளடங்கலாக, உங்களுடைய தேவைகள் மற்றும் இலக்குகளின் முழுமையான பார்வை ஒன்றை, உங்களுடைய RAI-MH மற்றும்/அல்லது OCANகள் வழங்குகின்றன. எனவே, உங்களுடைய பராமரிப்பாளர் வட்டத்திலுள்ள ஏனைய உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களுடன் உங்களுடைய மதிப்பீடுகளைப் பகிர்தல் உங்களுடைய பராமரிப்புக்கு மிகவும் பயனுள்ளதாகவிருக்கும். உங்களுடைய RAI-MH மற்றும்/அல்லது OCANகளுக்கான மின்னியல் அணுகலை வழங்குவதால், உங்களுடைய பராமரிப்பாளர் வட்டத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட உடல் ஆரோக்கியச் சேவைப் பராமரிப்பளர்கள் பின்வருவனவற்றைச் செய்யமுடியும்:

- ஒவ்வொரு உடல் ஆரோக்கியச் சேவைப் பராமரிப்பளருடனும் நீண்டதொரு கேள்வி-பதில் செய்முறைக்கூடாக மீண்டும் மீண்டும் நீங்கள் செல்லத் தேவையின்றி, ஏற்கனவேயுள்ள தகவல்களை உடனடியாகப் பகிர்ந்துகொள்ள முடியும்.
- இன்னொரு உடல் ஆரோக்கியச் சேவைப் பராமரிப்பளர் இனம்கண்ட உங்களுடைய ஏனைய தேவைகள், இலக்குகளை விரைவாக அறிந்துகொள்ள முடியும்.
- உங்களுடைய ஏனைய உடல் ஆரோக்கியச் சேவைப் பராமரிப்பளர்கள் இனம்கண்ட, உங்களுடைய தேவைகள், இலக்குகளைப் பூர்த்திசெய்வதற்கும் அடைவதற்குமாக உங்களுடன் சேர்ந்து தொடர்ந்து வேலை செய்ய முடியும்.
- ஒன்றிணைக்கப்பட்ட பராமரிப்புத் திட்டமொன்றை உங்களுக்காக உருவாக்குவதற்காக உங்களுடைய ஏனைய உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களுடன் ஒத்துழையுங்கள்.

**என்னுடைய மதிப்பீடுகளைப் பகிர்வதற்கு நான் விரும்பாவிட்டால் என்ன நடக்கும்?**

உங்களுடைய RAI-MH மற்றும் OCAN மதிப்பீடுகளை மின்னணுவியல்ரீதியாகப் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்புதலை மறுப்பதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. உங்களுடைய ஒப்புதலை எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் வாபஸ்பெறவும்/மாற்றவும் உங்களுக்கு உரிமையுண்டு. ஒப்புதலை மறுத்தால், William Oslerல் சேமிக்கப்பட்ட உங்களுடைய RAI-MH மற்றும்/அல்லது OCANகள் பாதுகாப்பாக இருக்கும், ஆனால் IAR ஊடாகப் பார்ப்பதற்கு பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது.

**என்னுடைய ஒப்புதலை பின்பு ஒரு நாள் எப்படி நான் வாபஸ் பெறுவது/ மாற்றுவது?**

பின்பு ஒரு நாள், உங்களுடைய ஒப்புதலை நீங்கள் பின்வரும் வழிகளுக்கூடாக வாபஸ் பெறலாம் அல்லது மாற்றலாம்:

- உங்களுடைய சிகிச்சைக்குப் பொறுப்பான மருத்துவக் குழு அங்கத்தவர் ஒருவரைத் தொடர்புகொள்ளல்;
- அல்லது 1-855-585-5279ல் IAR அழைப்பு நிலையத்தை (Call Centre) அழைத்து உங்களுடைய ஒப்புதலில் மாற்றம் ஒன்றைச் செய்யும்படி கோரல்.

குறிப்பு: இந்த முறை மூலம் உங்களுடைய ஒப்புதலை நீங்கள் மாற்றினால்; அனைத்து உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களினாலும் செய்யப்பட்ட உங்களுடைய மதிப்பீடுகளுக்கு அந்த மாற்றம் தானாகவே பிரயோகிக்கப்படும். உதாரணத்துக்கு, அழைப்பு நிலையத்தை நீங்கள் அழைத்து உங்களுடைய ஒப்புதலை மறுத்தால் உங்களுடைய மதிப்பீடு எதனையும் (Ontario Shores மற்றும் ஏனைய உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களிடமிருந்து வந்தவை) IAR ஊடாகப் பார்க்க முடியாமல் இருக்கும்.

- உங்களுடைய பெயரை IARல் தேட முடியாதவாறு, உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை மூடிமறைப்பதற்கும் IAR அழைப்பு நிலையம் உங்களுக்கு உதவ முடியும். IARல் உங்களுடைய Ontario Shores மதிப்பீடுகளை எதிர்காலத்தில் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்புதலை நீங்கள் வாபஸ் பெற விரும்பினால், உங்களுடைய சிகிச்சைக்குப் பொறுப்பான மருத்துவக் குழு அங்கத்தவர் ஒருவருடன் அல்லது அந்தரங்கத்துக்குப் பொறுப்பான எங்களுடைய அதிகாரியுடன் (Privacy Officer) தயவுசெய்து கதையுங்கள்.

உங்களுடைய தனிப்பட்ட உடல் ஆரோக்கியத் தகவல்கள் எப்படிக் கையாளப்படுகின்றன மற்றும் மின்னணுவியல்ரீதியான உடல் ஆரோக்கியப் பதிவுகள் முன்னெடுப்பில் பங்குகொள்ளும் ஏனைய உடல் ஆரோக்கியச் சேவை வழங்குநர்களுடன் அவை எப்படிப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன என்பது பற்றிய மேலதிகத் தகவல்களை அறிய நீங்கள் விரும்பினால், தலைவர், அந்தரங்கம்& அணுகல் (Leader, Privacy & Access) 905-430-4055 ext 6712ல் அந்தரங்கத்துக்குப் பொறுப்பான எங்களுடைய அதிகாரியைத் தொடர்புகொள்ளுங்கள்.

எங்களுடைய பிரிவுகளிலும் எங்களுடைய இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ள, நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கான வரவேற்புப் புத்தகத்திலுள்ள (Welcome Book for Patients and Families) தகவல்கள் நடைமுறை அறிக்கையில் (Statement of Information Practices), Ontario Shoresன் சேகரிப்புக்கான நடைமுறைகள், தனிப்பட்ட உடல் ஆரோக்கியத் தகவல்களைப் பாவித்தல் மற்றும் வெளிப்படுத்தல், மற்றும் உங்களுடைய உரிமைகள் பற்றிய மேலதிகத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

டிசம்பர் 2, 2014